**ஒதுக்கீட்டுத் தலைப்பு – 272 – மாவட்டச் செயலகம் குருநாகல்**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2012 ஆம் ஆண்டு**

## 1.1 மாவட்டச் செயலகத்தின் பிரதான பணிகள்

(i) அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், செயற்திட்டங்கள் மற்றும் நியதிச்சட்டக் கட்டளைச் சட்டங்களினால் வழங்கப்பட்ட அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள், பிரதேச செயலகங்களின் நடவடிக்கைகள் என்பன அரசாங்க விதிகளுக்கமைய அமுல்படுத்தப்படுவதற்குத் தேவையான ஒருங்கிணைப்பும் வழிகாட்டலும்.

(ii) மாவட்டத்தில் சட்டம், சமாதானம் பேணப்படுவதற்கும் மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்துவதற்கும் பாதுகாப்புப் பிரிவினருடன் சிறந்த ஒருங்கிணைப்பை ஏற்படுத்திக் கொள்ளல்.

(iii) பிற அரச நிறுவகங்களது பிரதிநிதியாகச் செயல்படுவது மற்றும் அரச வருவாயைக் சேகரித்தல் மற்றும் கணக்கிலிடுவதற்கான நிலையமாகச் செயற்படுதல்.

## 1.2 மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்

| | | | |
|---|---|---|---|
| (அ) | குருநாகலை | (கீ) | ரிதீகம |
| (ஆ) | பன்னல | (கு) | மல்லவபிட்டிய |
| (இ) | வாரியபொல | (கூ) | மாஸ்பொத்த |
| (ஈ) | இப்பாகமுவ | (கெ) | பிங்கிரிய |
| (உ) | கனேவத்த | (கே) | நாரம்மலை |
| (ஊ) | மாஹோ | (கை) | பொல்பித்திகம |
| (எ) | கிறிபாவ | (கொ) | கல்கமுவை |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | அம்பன்பொல | (கோ) | எஹெட்டுவெவ |
| (ஐ) | பண்டுவஸ்நுவர (மேற்கு) | (கௌ) | நிக்கவெரட்டிய |
| (ஒ) | பண்டுவஸ்நுவர (கிழக்கு) | (ச) | கொபெய்கனே |
| (ஓ) | குளியாப்பிட்டிய (மேற்கு) | (சா) | ரஸ்நாயகபுர |
| (ஔ) | குளியாப்பிட்டிய (கிழக்கு) | (சி) | கொட்டவெஹெர |
| (க) | அளவ்வ | (சீ) | வீரம்புகெதர |
| (கா) | மாவத்தகமை | (சு) | பமுனாகொட்டுவ |
| (கி) | பொல்கஹவெல | (சூ) | உடுபத்தாவ |

## 1.3 கணக்காய்வின் நோக்கெல்லை

குருநாகலை மாவட்டச் செயலகத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 ஒக்தோபர் 30 ஆந் திகதி மாவட்டச் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் கணக்கிணக்கக் கூற்றுக்களினதும் மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறானவை.

**1.4 கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புகள்**

ஒதுக்கீட்டுக் கணக்கும் கணக்கிணக்கக் கூற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பினது 148, 149, 150, 152 ஆகிய உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு ஏற்ப பேணப்படுதல், தயாரிக்கப்படுதல் மற்றும் நியாயபூர்வமாக சமர்ப்பிக்கப்படுதல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களைக் கொண்டிராத கணக்குகளையும் கணக்கிணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல், நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடலும், அமுல்படுத்தலும் பேணிவருதலும் இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**1.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் குருநாகலை மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) முதல் (இ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் 1.6 முதல் 1.15 வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களை தவிர்த்து திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(அ) ஒதுக்கீட்டுக் கணக்குகள்**

**(i) மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

மீளாய்வாண்டிற்காக மாவட்ட செயலகத்திற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 1,384,104,729 ஆக இருந்ததுடன் ஆண்டின் இறுதியளவில் இதில் ரூபா 1,360,400,579 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க தேறிய சேமிப்பு ரூபா 23,704,150 ஆக இருந்ததுடன் அது மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் 1.71 சதவீதத்தினைக் கொண்டிருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| செலவு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மதிப்பிடப்பட்ட நிதி ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய நிதி ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| மீண்டுவருபவை | 913,050,000 | 1,339,525,689 | 12,907,230 | 0.96 |
| மூலதனம் | 32,300,000 | 44,579,040 | 10,796,920 | 24.22 |
| | | | | 1.71 |
| மொத்தம் | 945,350,000 | 1,384,104,729 | 23,704,150 | |

**(ii) பாதீட்டு முரண்கள்**

- செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 225,000 தொகையான மொத்த நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தன.

- 2011 திசெம்பர் 31 ஆந் திகதிய 155 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் கூட்டுத்தொகை ரூபா 700,000 ஆன நிதியேற்பாடுகள் நிறுத்திவைக்கப்பட்டதன் பின்னர் 02 செலவின விடயங்களில் நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு தேறிய நிதியேற்பாட்டில் 24 சதவீதம் தொடக்கம் 51 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தன.

- 06 செலவின விடயங்களுக்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளிலிருந்து கவனத்திற் கொள்ளக்கூடிய அளவு நிதிப் பிரமாணம் 66 மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாட்டின் கீழ் பெறப்பட்டதன் பின்னர் ஏனைய செலவின விடயங்களுக்காக மாற்றுதல்களால் தேறிய நிதியேற்பாட்டில் 7 சதவீதம் தொடக்கம் 27 சதவீதம் வரையிலான வீச்சில் சேமிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**(iii) பிற அமைச்சுகளும் திணைக்களங்களும் வழங்கிய நிதியேற்பாட்டின் பயன்பாடு**

பல்வேறு செயற்பாடுகளுக்காக 23 அமைச்சுக்கள் மற்றும் 17 திணைக்களங்களினால் முறையே ரூபா 4,639,502,796 தொகையும் ரூபா 3,326,683,518 தொகையுமாக ரூபா 7,966,186,314 கூட்டுத்தொகையான நிதிஏற்பாடுகள் மாவட்டச் செயலாளருக்கு வழங்கப்பட்டிருந்துடன் அதில் முறையே ரூபா 4,406,994,571 தொகையும் ரூபா 3,216,717,331 தொகையும் பயன்படுத்தப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் சேமிப்பு ரூபா 232,508,225 தொகையும் ரூபா 109,966,187 தொகையுமாக இருந்ததுடன் அது ஏற்பாட்டில் 5.01 சதவீதமாகவும் 3.31 சதவீதமாகவும் இருந்தது.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

27201 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் அனுமதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் கீழே தரப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடி யானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானவை | உச்ச எல்லை | உள்ளபடி யானவை |
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 95,000,000 | 62,194,926 | 70,000,000 | 93,349,518 | 355,000,000 | 282,403,432 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 27201 ஆம் இலக்க விடயத்தின் அரசாங்க உத்தியோகத்தருக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5,482,778 ஆக இருந்ததுடன், அந்த நிலுவையான மீதிகளை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது.

(ii) 20 அசைவற்ற நிலுவை மீதிகளில் ரூபா 2,080,308 தொகையான நிலுவைக் கடன் மற்றும் முற்பணங்கள் காணப்பட்டதுடன் அத்தொகைகளை அறவீடு செய்தல் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டன.

(iii) நிதிப் பிரமாணம் 427 இன் பிரகாரம் திறைசேரிப் புத்தகங்களுடன் மாவட்ட செயலகத்தின் புத்தகங்கள் இணக்கஞ் செய்யப்பட்டிருக்கவில்லை. திறைசேரி ஏடுகள் மற்றும் திணைக்களப் புத்தகங்களுக்கிடையே ரூபா 120,600 தொகையான வேறுபாடு வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் திறைசேரி கணனிக் குறிப்புக்களின் பிரகாரம் மீன்பிடி மற்றும் நீர்வளத் திணைக்களத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட பிழையான செலவு வைத்தல்கள் அதற்கான காரணமாக இருந்தன. அது பிழையாக சமூர்த்தி திணைக்களமாக கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த பிழையான செலவு வைத்தல்கள் ஆண்டின் இறுதியிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(iv) மீளாய்வாண்டின் இறுதியில் 02 வருடங்களுக்கு மேற்பட்ட சேவை நிலைய மாற்றங்கள், ஓய்வு பெறல், சேவையை விட்டு விலக்குதல், மரணித்தல் மற்றும் சேவையை விட்டுச் செல்லுதல் போன்ற காரணங்களினால் அறவிட வேண்டியிருந்த ரூபா 1,800,983 தொகையான நிலுவை மீதியை அறவீடு செய்துகொள்வதற்கான முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) 2005 ஏப்ரல் 25 ஆந் திகதிய 122 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபத்தின் 2:2 ஆம் பந்தியின் பிகாரம் ஒவ்வொரு மாத முடிவிலும் ஆதனக் கடன் செலுத்துதலுக்காக அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற கடன் வட்டியின் வேறுபாடுகளை இனங்காண்பதற்காக திறைசேரிக்கு அனுப்ப வேண்டிய மாதாந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) பொது வைப்புக் கணக்குகள்**

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மாவட்ட செயலகத்தின் பொது வைப்புக் கணக்கின் மீதி ரூபா 391,594,131 ஆக இருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 02 வருடங்களை விஞ்சிய ரூபா 8,146,478 தொகையான வைப்பு தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் பல்வேறு செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்ட ரூபா 1,460,362 தொகை உரிய செயற்பொறுப்புக்களில் நிறைவேற்றப்படாது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(iii) குறைபாடுகளைப் பூர்த்தி செய்யாமை, நிறுத்தி வைக்கப்பட்ட பணத்தை மீளப் பெற்றுக்கொள்வதற்கு கவனம் செலுத்தப்படாமை போன்ற காரணங்களினால் பொல்கஹவெல, மாஸ்பொத்த, மாவத்தகம, பண்டுவஸ்நுவர (மேற்கு) மற்றும் அலவ்வ போன்ற பிரதேச செயலகங்களில் 52 செயற்திட்டங்களின் ரூபா 709,780 கூட்டுத்தொகையானது பொது வைப்புக்கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 1.6 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 1.6.1 கூட்டிணைந்த திட்டம்

அனைத்து அமைச்சு செயலாளர்கள், மாகாண சபை பிரதம செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், மாவட்ட செயலாளர்கள், மாகாண உள்ளூராட்சி தலைவர்கள் ஆகியோருக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதி பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து எதிர்காலத்தில் ஆகக் குறைந்தது 3 ஆண்டுகளுக்காக கூட்டிணைந்த திட்டம் மாவட்ட செயலகத்தினால் வருட ஆரம்பத்தில்

தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

---

மேலே பந்தி 1.6.1 இல் குறிப்பிடப்பட்ட அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்படாமையினால் மாவட்ட செயலகம் மற்றும் அதன் கீழுள்ள 30 பிரதேச செயலகங்களுக்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டம் கூட்டிணைந்த திட்டத்திற்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.6.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

---

மேலே பந்தி 1.6.1 இல் குறிப்பிடப்பட்ட அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2013 யூலை 10 ஆந் திகதியே பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருந்தது.

### 1.6.4 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

---

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபத்தின் பிராகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.6.5 உள்ளகக் கணக்காய்வு**

(அ) சிரேஷ்ட கணக்காளரின் தலைமையில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு உருவாக்கப்பட்டிருந்ததுடன் அதன் மூலம் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் கொடுக்கல் வாங்கல்களை பரிசோதனை செய்து அறிக்கை விநியோகிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்காக சிரேஷ்ட நிலையும் அனுபவமும் உள்ள உத்தியோகத்தர்களை போதியளவில் ஈடுபடுத்துவதற்குப் பதிலாக பயிலுனர் பட்டதாரிகள் அதிக எண்ணிக்கையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் போது குருநாகலை மாவட்டச் செயலகத்தின் கீழ் உள்ள 30 பிரதேச செயலகங்களில் கொட்டவெஹெர, பன்னல, நாரம்மல, ரிதீகம, குளியாப்பிட்டி (கிழக்கு) மற்றும் பொல்கஹவெல போன்ற 06 பிரதேச செயலகங்களில் மாத்திரம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் கொடுக்கல் வாங்கல்கள் பரீட்சிக்கப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**1.6.6 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினை அமுல்படுத்துதல்**

ஆகக் குறைந்தது 03 மாதங்களுக்கு ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் ஆண்டிற்கு 04 தடவை நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக 03 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. அதன் போது கலந்துரையாடலுக்கு எடுக்கப்பட்ட விடயங்களை அமுல்படுத்துதல் மந்தகதியில் காணப்பட்டது.

**1.7 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**(அ) செயற்பாடற்ற மற்றும் குறைந்த பயன்பாடுடைய சொத்துக்கள்**

தண்ணீர் பவுசர், மோட்டார் சைக்கிள் மற்றும் 02 தட்டச்சுக்கள் அதிகமான காலமாக செயற்பாடற்றுக் காணப்பட்டது.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் மூலம் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2013 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் குருநாகல் மாவட்ட செயலகம், மாவட்ட செயலாளரின் உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் சுற்றுலா விடுதியின் வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டு 2013 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ரஸ்நாயகபுர பிரதேச செயலகத்தின் பொருட்பதிவேட்டுப் பொருட்கள் மத்திய அரசாங்கத்திற்கும், வடமேல் மாகாண சபைக்கும் செல்வதனை இனங்காணக்கூடிய வகையில் குறியீட்டு முறைமையொன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(இ) பிற நிறுவனங்களுக்குரிய சொத்துக்களை முறையற்றவாறு பயன்படுத்துதல்**

ஏனைய நிறுவனங்களுக்குரிய சில சொத்துக்கள் முறையான அங்கீகாரமின்றி மாவட்டச் செயலகத்தால் பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கணக்காய்வுத் தெரிவுச் செய்வைகளின் போது அவதானிக்கப்பட்டன. விபரம் கீழே காணப்படுகின்றன.

| | **சொத்துவகை** | **சொத்துக்குரிய நிறுவனம்** | **எண்ணிக் கை கூறு அல்லது அளவு** | **பெறுமதி** | **காலப் பகுதி** |
|---|---|---|---|---|---|
| | ------------------------ | --------------------- | ------------------ | ---------------------- | ----------------------- |
| | | | | ரூபா | |
| (i) | வாகனங்கள் | வயம்ப மாகாணசபை | 06 | - | 1989 தொடக்கம் |
| (ii) | தொழிற்சாலையும் அலுவலக உபகரணங்களும் | ஆசிய அபிவிருத்தி வங்கிச் செயற்திட்டம் | - | 200,000 | 1983 தொடக்கம் |

**(ஈ) கையேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்**

---

தெரிவுப் பரிசீலனைகளின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பொல்கஹவெல பழைய பிரதேச செயலகம் அமைந்துள்ள 380 பேர்ச் பரப்பளவான காணி மற்றும் கட்டிடம் பொல்கஹவெல பிரதேச சபைக்குரிய 120 பேர்ச் காணிக்கு ஒத்து மாற்றப்பட்டிருந்த போதிலும் அந்த ஒத்துமாறல் செயற்பாடுகள் 2012 ஆம் ஆண்டின் இறுதிவரையிலும் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) பொல்கஹவெல பிரதேச சபையினால் முறையாக ஒத்துமாறல் நடவடிக்கைகள் செய்யப்படாத காணியில் திறைசேரியின் நிதியேற்பாட்டைப் பயன்படுத்தி ரூபா 27,321,739 தொகை செலவிடப்பட்டு கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

(iii) ரிதீகம பிரதேச செயலாளர் பிரிவில் தனியார் காணிகளில் 11 செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் அவைகள் அரசாங்கத்திற்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) பொல்கஹவெல பிரதேச செயலாளர் பிரிவில் அரசாங்கத்திற்கு கையளிக்கப்படாத காணியில் நிர்மாணிக்கப்பட்ட சுகாதார நிலையமொன்றைத் திருத்துவதற்கு ரூபா 1,490,546 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(v) குளியாப்பிட்டி (கிழக்கு) பிரதேச செயலாளர் பிரிவில் பொதுச் செயற்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்ட அல்லது அரசாங்கத்திற்குரியதாக உறுதிப்படுத்தப்படாத காணிகளில் பொதுக் கிணறுகள் மற்றும் கட்டிடங்களை நிர்மாணிக்கும் 09 செயற்திட்டங்களுக்கு அரசாங்கத்தின் பங்களிப்பாக ரூபா 8,819,276 தொகையான செலவினம் உரிமை மாற்றப்பட முடியாத 03 காணிக்கூறுகளில் 03 பொதுக் கிணறுகள் மற்றும் அறநெறிப்பாடசாலைக் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு ரூபா 2,973,889 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது.

**(உ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

குருநாகல் மாவட்ட செயலகத்தினால் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத ஒரு வருடத்திற்குக் குறைவான பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 189,682 ஆக இருந்தது.

## 1.8 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசீலனையில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண அறிவுறுத்தல்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | பெறுமதி | | இணங்காமைகள் |
|---|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 110 | - | | குளியாப்பிட்டி (கிழக்கு) பிரதேச செயலகத்தினால் நட்டம் மற்றும் இழப்பு பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 137 | 115,349 | | பொல்பித்திகம பிரதேச செயலகத்தில் 2012 ஆம் ஆண்டின் 09 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் உறுதிப்படுத்தப்படாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (iii) | நிதிப்பிரமாணம் 880 | 51,900 | * | நிகவெரட்டிய பிரதேச செயலகத்தில் 08 பதவிகளுக்குரிய 08 உத்தியோகத்தர்கள் மற்றும் ரிதீகம பிரதேச செயலகத்தின் 07 பதவிகளுக்குரிய 07 உத்தியோகத்தர் களிடமிருந்து பிணைப்பணம் பெறப்பட்டிருக்க வில்லை. |
| | | 10,000 | * | நிக்கவெரட்டிய பிரதேச செயலகப் பிரிவில் 10 கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் ரிதீகம பிரதேச செயலகத்தில் 66 கிராம உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைப்பணம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | பொது நிருவாகச் சுற்றறிக்கை | | | |
| | 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றுநிருபம் | - | | குருநாகலை மாவட்ட செயலகம் மற்றும் அதன் கீழுள்ள 30 பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | திறைசேரிச் சுற்றறிக்கை | | |
| | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய 28 ஆம் இலக்க ஐஏஐ/2002/02 ஆம் இலக்க சுற்றுநிருபம் | - | மாவட்டச் செயலகம் மற்றும் 30 பிரதேச செயலகங்களில் கணனி மற்றும் உபபாகங்களுக்காக தனிப்பட்ட பொருட்பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டுச் சுற்றறிக்கை | | |
| | (i) 2012 சனவரி 28 ஆந் திகதிய 1/2012 ஆம் இலக்க சுற்றுநிருபம் | - | பொல்கஹவெல மற்றும் ரீதிகம பிரதேச செயலகங்களில் மூலதனச் செலவினத்தின் கீழ் தாய் நலப் பிரிவை நிர்மாணித்து அபிவிருத்தி செய்தல், சிறுவர் மற்றும் முதியோர் இல்லங்களின் வசதிகளை அபிவிருத்தி செய்தல், சிறிய நீர்ப்பாசனம் மற்றும் வாய்க்கால்களை அபிவிருத்தி செய்தல் போன்ற செயற்திட்டங்களுக்கு நிதியேற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்க வில்லை. |
| | (ii) 2012 சனவரி 28 ஆந் திகதிய 1/2012 ஆம் இலக்க சுற்றுநிருபம் | 204,064 | பதிவு செய்யப்பட்டு 02 வருடங்களுக்குக் குறைந்த பொல்கஹவெல பிரதேச செயலகத்திற்குரிய 07 தொண்டர் அமைப்புக்களுக்கு கூட்டுத்தொகை ரூபா 61,629 பெறுமதி மற்றும் ரிதீகம பிரதேச செயலகத்திற்குரிய 05 தொண்டர் அமைப்புக்களுக்கு ரூபா 142,435 பெறுமதியான பொருட்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தன. |

(உ) ஏனைய சுற்றறிக்கை

| | | | |
|---|---|---|---|
| (i) | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3:9:1 ஆம் வழிகாட்டி | 6,862,870 | ரிதீகம பிரதேச செயலகப் பிரிவில் 07 அபிவிருத்தித் திட்டங்களை கையேற்றிருந்த 07 கிராமிய அமைப்புக்கள் அவற்றின் உடன்படிக்கைக் காலத்தில் வேலைகளைப் பூர்த்தி செய்து கையளித்திருக்கவில்லை. |
| (ii) | வன பாதுகாப்பு பணிப்பாளர் நாயகத்தின் 2009 யூன் 16 ஆந் திகதிய 3/2009 ஆம் இலக்க சுற்றறிக்கை | 3,600 | 2011 செப்தெம்பர் 01 ஆந் திகதி தொடக்கம் 2012 ஒக்தோபர் வரை மர அனுமதிப்பத்திரக் கட்டணம் பிரதேச செயலகத்தின் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. |

## 1.9 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதில் பலவீனங்கள்

செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாது கைவிடப்பட்டமை, செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்பட்டமை மற்றும் செயற்திட்டங்களின் தாமதம் தொடர்பான கணக்காய்வு தெரிவுப் பரிசீலனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### (அ) செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிட்டமை

மாவட்ட செயலகத்தின் கீழுள்ள 09 பிரதேச செயலகங்களினால் கீழே குறிப்பிடப்படுகின்ற செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட வேண்டிய திகதிய | ஆரம்பிக்கப்படாமைக்கான காரணம் சுருக்கமாக |
|---|---|---|---|
| | ரூபா | | |
| பன்முகப்படுத்தப்பட்ட, ஒரு கிராமத்திற்கு ஒரு நிகழ்ச்சித் திட்டம், குளம் மற்றும் வீதி மீளமைப்பு, நீர்ச் செயற்திட்டங்களை உள்ளடக்கிய 21 செயற்திட்டங்கள் (09 பிரதேச செயலகங்கள்) | 16,160,863 | 2012.05.15 தொடக்கம் 2012.12.03 வரையிலுள்ள திகதிகள் | ஒப்பந்தக்காரர் முன்வராமை, உடன்படிக்கை கைச்சாத்திடாமை, உடன்படிக்கை செய்த அமைப்புக்கள் வேலையினை ஆரம்பிக்காமை விசேடமான காலநிலை நிலைமை (வரட்சியும் வெள்ளப் பெருக்கும்) |

**(ஆ) செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாது கைவிடல்**

மாவட்ட செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்களினால் பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்பட்டிருந்தன.

| பிரதேச செயலகம் | செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப் பட்ட திகதி | 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலவினம் | கைவிடப்பட்டமைக்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | ரூபா | |
| உடுபத்தாவ | (i) பிபிலதெனிய நீர் உத்தேசத்திட்டம் (ஒரு கிரமாத்திற்கு ஒரு வேலை) | 414,960 | 2012.10.07 | - | போதியளவான தகவல்களுடன் மதிப்பீட்டை நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு கையளிக்காமை. |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| -மேற்படி- | (ii) | தும்மலசூரிய மடவலாகார கிராமத்திற்கு மூன்று சுற்று மின்சாரம் வழங்குதல் | - | - | - | மின்சார சபைக்கு கொடுப்பனவு செய்யப்பட்டு பட்டியல் சமர்ப்பிக்கப்படாமை மற்றும் மின்சார சபைக்கு ரூபா 20,000 தொகை செலுத்துவதற்கு சங்கம் இணங்காமை |
| ரிதீகம | (i) | கந்தேகெதர பிரதான வீதியில் தேவையான இடங்களுக்கு கொங்கிரீட் இடுதல் | 1,044,480 | 2012.10.31 | - | மோசமான காலநிலை |
| -மேற்படி- | (ii) | அலவல-கம்மெத வீதியின் தொடக்கத்திலுள்ள மதகுடன் வீதிக்கு கொங்கிரீட் இடுதல் | 1,061,020 | 2012.11.30 | - | மோசமான காலநிலை நிலைமை மற்றும் காலம் போதியளவில் இல்லாமை |
| -மேற்படி- | (iii) | கடியாகம-அறுபொல கந்த வீதி மற்றும் அறுபொலவத்த வீதிக்கு கொங்கிரீட் இடுதல். | 1,043,138 | 2012.12.05 | - | காலம் போதியளவில் இல்லாமை மற்றும் தேவையான பொருட்களின் போக்குவரத்தில் சிரமம். |

**(இ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்**

மாவட்ட செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்களினால் பின்வரும் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப் பட்ட திகதி | பூர்த்திசெய்யப்பட வேண்டிய திகதி | 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் செலவினம் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | | | ரூபா | |
| வீதி, பாலம், மதகு, கட்டிடம், சிறிய நீர்ப்பாசனம், நீர் செயற்திட்டம், மாகாண முதலீடு போன்ற 154 செயற்திட்டங்கள் | 184,755,164 | 2012.06.22 தொடக்கம் 2012.12.12 வரையான திகதிகள் | 2012.07.18- 2012.12.31 வரையான திகதிகள் | 21 செயற்திட்டங்கள் தவிர எஞ்சிய 133 செயற்திட்டங்களுக்காக ரூபா 74,393,167 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | காலநிலைத் தன்மை, மூலப் பொருள் நிலுவை, காலம் போதியளவில் இல்லாமை, பயிற்சி ஊழிய நிலுவை, காணிப் பிணக்குகளினால் பிரதேச சபை உரிய திகதியில் கையளிக்காமை போன்ற காரணங்கள் |

**(ஈ) நிதி விடுவிக்கப்பட்டிருந்தும் செயல்முன்னேற்றத்தைப் பெற்றிராத செயற்திட்டங்கள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசீலனையின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) 2012 கிராம எழுச்சியின் கீழ் பூர்த்தி செய்யப்பட வேண்டிய ரிதீகம பிரதேச செயலளர் பிரிவில் 04 நீர்ச் செயற்திட்டங்களையும் 04 மின்சார செயற்திட்டங்களையும் அமுல்படுத்துவதற்காக முறையே நீர்வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்புச் சபைக்கு ரூபா 3,958,690 தொகையும் மின்சார சபைக்கு ரூபா 3,798,105 தொகையும் செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறும் அவைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) 2012 கிராம எழுச்சியின் கீழ் பொல்கஹவெல பிரதேச செயலாளர் பிரிவில் 02 கிராம உத்தியோகத்தர் பிரிவில் 02 சனசமூக மண்டபங்கள் நிர்மாணிப்பதற்காக ரூபா 628,750 தொகை

செலவிடப்பட்டிருந்த போதிலும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அவற்றின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிராததுடன் ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்ட 29 செயற்திட்டங்களுக்காக ரூபா 195,000 தொகையான முற்பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அவற்றின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2010 இன் கிராம எழுச்சியின் கீழ் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்ட 04 செயற்திட்டங்களுக்கான நிதியேற்பாடு ரூபா 934,642 தொகை பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமையின் காரணமாக அந்த நிதியேற்பாடு 2011 ஆம் ஆண்டின் போது அரசாங்கத்தின் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்தது.

(iii) ரிதீகம பிரதேச செயலகப் பிரிவில் ஜங்குரே கிராம உத்தியோகத்தர் பிரிவில் குடிநீர் செயற்திட்டமொன்றை நிர்மாணிப்பதற்காக சாத்திய வள மற்றும் இட ஆய்வு அறிக்கைக்கு ரூபா 33,600 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் நிலத்தின் உள்ளகப்பகுதியில் கல் வெளிப்பட்டமையினால் செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. அந்த பிரதேச செயலகப் பிரிவிற்குரிய நாஹல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவில் குடிநீர் செயற்திட்டத்தின் ஆய்வு மற்றும் நீர் பயன்பாட்டிற்கு பொருத்தமானது என்பதற்கான அறிக்கை பெற்றுக்கொள்வதற்கும் கிணற்றின் நிர்மாண நடவடிக்கைகளுக்கும் ரூபா 957,194 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் நிதியேற்பாடு போதியளவில் இல்லாமையினாலும் மற்றும் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் மேற்கூறப்பட்ட அறிக்கை பெறப்படாமையின் காரணமாகவும் செயற்திட்டத்தை பூர்த்தி செய்ய முடியாதிருந்தது.

(iv) குளியாப்பிட்டி (கிழக்கு) பிரதேச செயலகப் பிரிவில் பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டின் கீழ் பூர்த்தி செய்யப்பட வேண்டிய ரூபா 1,006,046 பெறுமதியான 23 செயற்திட்டங்கள் தொடர்ந்தும் அடுத்த ஆண்டிற்கும் கொண்டு செல்லப்பட்டிருந்தன.

**(உ) கால தாமதத்தின் பின்னர் வேலை ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள்**

உடுபத்தாவ பிரதேச செயலாளர் பிரிவில் கிராம எழுச்சி செயற்திட்டத்தின் கீழ் 2012 மே மற்றும் யூன் மாதங்களின் போது ஆரம்பிக்கப்பட வேண்டிய 02 வீதிகளுக்கு கொங்கிரீட் சிறு கற்கள் இடுவதற்காக ரூபா 1,956,734 தொகையான நிதியேற்பாடு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் அவைகள் முறையே 01 மாதம் மற்றும் 02½ மாதங்கள் தாமதித்து ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

**(ஊ) பொருட்கள் மற்றும் சேவைகளின்றி பணத்தை விடுவித்தல்**

குளியாப்பிட்டி (கிழக்கு) பிரதேச செயலகத்தினால் 2012 பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டின் கீழ் மீளாய்வாண்டின் போது ரூபா 83,400 பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் இறுதி வரையிலும் அந்த பொருள் வழங்கல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 1.10 செயலாற்றல்

2012 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைகத் திட்டத்தின் பிரகாரம் மாவட்ட செயலகம் மற்றும் அதன் கீழ்வரும் பிரதேச செயலகங்களின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான செயற்பாடுகள்**

தெரிவுப் பரிசீலனையின் போது 06 பிரதேச செயலகங்களில் போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான செயற்பாடுகள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) அம்பன்பொல பிரதேச செயலகம்

- பாடசாலைக் கட்டிடமொன்றின் மேடையின் கூரைக்கு பக்கச் சுவர் ஒன்றைக் கட்டுவதற்காக ரூபா 20,747 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் பக்கச் சுவர் போடப்பட்டிருக்கவில்லை.

- திவிநெகும இன் கீழ் பிரிவிற்குள் ரூபா 252,000 பெறுமதியான கோழிக் குஞ்சுகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த போதிலும் உரிய ஊசி மருந்துகள் வழங்கப்படாமையினால் அதிக அளவில் இறந்திருந்ததுடன் பகிர்ந்தளிக்கப்பட்ட குஞ்சுகளுக்கிடையே ஆண் குஞ்சுகள் கனிசமான அளவில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

- மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 13,22,545 தொகையான 12 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) ரஸ்நாயக்கபுர பிரதேச செயலகம்

---------------------------------------------------------

- குருவிக்குளம் வித்தியாலயத்தின் பிரதான மண்டபம் ரூபா 105,109 தொகை செலவில் திருத்தப்பட்டிருந்த போதிலும் அதனைச் சுற்றி 09 இடங்களில் வெடிப்புக்களும் 03 இடங்களில் குழிகளும் ஏற்பட்டிருந்தன.

- இந்த பிரதேச செயலகத்தில் 2012 மற்றும் அதற்கு முன்னுள்ள பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு நிதியேற்பாட்டினைப் பயன்படுத்தி கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 200,475 பெறுமதியான பொருட்களை பகிர்ந்தளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) குளியாப்பிட்டி (கிழக்கு) பிரதேச செயலாளர் பிரிவில் ரூபா 682,654 பெறுமதியான பயிர் வகைகள் மற்றும் 20,495 தேனீப் பெட்டிகள் நலனாளிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த போதிலும் அவைகளைப் பகிர்ந்தளித்தல் தொடர்பான தகவல்கள் பிரதேச செயலகத்தில் காணப்படவில்லை.

(iv) பொல்பித்திகம பிரதேச செயலகம்

---------------------------------------------------------

- ஹாத்திகம-மொரகொட வீதியில் கொங்கிரீட் இடுவதற்கு ரூபா 980,000 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அதற்கு பலகை முட்டுக்களும் கிரவல் நிறைத்தல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

- புல்னேவ-ஹொரவ்வெவ வீதிக்கு கொங்கிரீட் சிறுகற்கள் இடுவதற்கு ரூபா 980,000 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் வீதி ஓரங்களில் கிரவல் இட்டு செப்பனிடப்படாமையினால் அனேக இடங்கள் கீழிறங்கியிருந்தன.

(v) பொல்கஹவெல பிரதேச செயலகப் பிரிவில் ரூபா 137,267 உடன்படிக்கைத் தொகையில் நிறைவேற்றப்பட்ட மேலே இணைக்கப்பட்ட பலகைகளை இடல் மற்றும் பக்கச் சுவர் நிர்மாணிக்கும் வேலையில் பக்கச் சுவர் நிர்மாணித்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(vi) ரிதீகம பிரதேச செயலகப் பிரிவில் 10 கிராம உத்தியோகத்தர் பிரிவில் 10 கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக போதியளவான கட்டுநிதி ஒதுக்கப்படாமையினால் அவற்றின் வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது.

**1.11 வங்கிக் கணக்கு செயற்பாடுகளில் குறைபாடு**

**செயற்பாடற்ற வங்கிக் கணக்கு**

பின்வரும் வங்கிக் கணக்குகள் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

(i) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 15 வருடங்களுக்குக் கிட்டிய காலம் இப்பாகமுவ பிரதேச செயலகத்தில் செயற்பாடற்ற வங்கிக் கணக்கொன்றில் ரூபா 20,322 தொகையான மீதி காணப்பட்டது.

(ii) மாவட்ட செயலகத்தில் 15 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் செயற்பாடற்ற 03 வங்கிக் கணக்குகளில் காணப்பட்ட ரூபா 25,392 தொகையான மீதி தற்போது பயன்படுத்தப்படுகின்ற நடைமுறைக் கணக்கிற்கு மாற்றுவதற்காக பொது வைப்புக் கணக்கில் 2011 திசெம்பர் 18 ஆந் திகதி செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும் அது மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 1.12 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

மாவட்ட செயலகத்தினால் செய்யப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையிலானதாக இருந்தது. தெரிவுப் பரிசீலனைகளின் போது அவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) ரிதீகம பிரதேச செயலகத்தில் குழாம் வாகனத்திற்கு மீளாய்வாண்டின் போது மத்திய அரசு, மாகாண சபை, கிராம எழுச்சியின் கீழ் ரூபா 298,495 தொகையான எரிபொருள் பெறப்பட்டிருந்த போதிலும் எரிபொருள் நுகர்வு அரையாண்டிற்கு ஒரு தடவை பரிசீலனை செய்யப்படாமையினால் அதன் எரிபொருள் மீதி பிரச்சனைகளுக்குரியதாகக் காணப்பட்டது.

(ஆ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சுச் செயலாளரின் 2012 யூன் 11 ஆந் திகதிய 01/2012 ஆம் இலக்க சுற்றுநிருபத்தில் 2012 சனவரி தொடக்கம் இரத்துச் செய்யப்பட்ட 2011 யூலை 13 ஆந் திகதிய 7/2011 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் கிராம எழுச்சி மற்றும் மகநெகும செயற்திட்டங்களின் கடமைகளைப் புரிந்தமைக்காக வார இறுதி விடுமுறைதினச் சம்பளமாக 2012 மார்ச் தொடக்கம் செப்தெம்பர் வரை அம்பன்பொல பிரதேச செயலாளர் ரூபா 18,405 தொகையும் குளியாப்பிட்டி (கிழக்கு) பிரதேச செயலாளர், உதவிப் பிரதேச செயலாளர், கணக்காளர் மற்றும் உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) என்போருக்கு 2012 சனவரி தொடக்கம் நவம்பர் வரை ரூபா 112,788 தொகையும் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 29,122 தொகை குளியாப்பட்டி (கிழக்கு) பிரதேச செயலகத்தின் 04 உத்தியோகத்தர்களிடமிருந்து மாத்திரம் மீளப் பெறப்பட்டிருந்தது.

(இ) ரஸ்நாயகபுர பிரதேச செயலகத்தில் மேற்கொள்ளப்பட்ட காசு பரிசீலனையின் போது செலுத்தப்படாத கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களின் பெறுமதி ரூபா 58,540 ஆக சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்தக் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களின் பெறுமதி ரூபா 42,776 ஆக இருந்தமை வெளிப்படுத்தப்பட்டமையினால் ரூபா 15,764 தொகை மிகையாக இருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. அதற்கான காரணமாக 2012 ஆம் ஆண்டில் பெறப்படாத படிகள் மற்றும் பிரயாணச் செலவினம் எனவும், அந்த கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததாகவும் அத்தொகை அரசாங்க வருமானத்தில் செலவு

வைக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. செலுத்தப்படாத கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்கு வழங்கப்பட்ட அடிப்படை மற்றும் அத்தொகைகள் பொது வைப்புக்களில் செலவு வைக்கப்படாமல் வருமானத்திற்கு செலவு வைத்தல் பிரச்சினைகளுக்குரியதாக இருந்தது.

## 1.13 இழப்புக்களும் நட்டங்களும்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசீலனைகளின் போது பின்வரும் நட்டங்களும் இழப்புக்களும் ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நாரம்பல பிரதேச செயலகத்தின் வாகனமொன்றின் இயந்திரத்தில் உராய்வு எண்ணெய் இன்றி 2006 யூன் 21 ஆந் திகதி ஓடியமையினால் இயந்திரத்தில் உட்பகுதியில் ஏற்பட்ட இழப்பைச் சரிசெய்வதற்காக ரூபா 338,370 தொகை செலவிடப்பட்டிருந்தது. இந்த தொகை சம பங்குகளில் பிரதேச செயலாளரிடமிருந்தும், சாரதியிடமிருந்தும் அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் பிரதேச செயலாளர் செலுத்த வேண்டிய ரூபா 169,185 தொகையை அவர் செலுத்தியிருந்ததுடன் சாரதியிடமிருந்து அறவிட வேண்டியிருந்த பங்கிலிருந்து ரூபா 25,000 தொகை இது வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிங்கிரிய பிரதேச செயலகத்திற்குரிய ஒரு வாகனம் 2012 மார்ச் 19 ஆந் திகதி திடீர் விபத்திற்குள்ளாகியமையினால் ரூபா 391,445 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 330,236 தொகை காப்புறுதி மூலம் கிடைத்திருந்த போதிலும் எஞ்சிய ரூபா 61,209 தொகையை சாரதியிடமிருந்து அறவிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. எனினும் அந்தத் தொகை 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் சாரதியிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) மாவத்தகம பிரதேச செயலகத்திற்கு நியமிக்கப்பட்ட ஒரு வாகனம் 2009 பெப்ரவரி 05 ஆந் திகதி திடீர் விபத்திற்குள்ளாகியமையினால் ரூபா 208,223 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்ததுடன் அந்த வாகனத்தை ஓட்டிய சாரதியிடமிருந்து அறவீடு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த விபத்தின் பின்னர் வாகனத்தை ஓட்டிய அமையச் சாரதி சேவைக்கு அறிக்கையிடாமையினால் அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது.

**1.14 முகாமைத்துவ பலவீனங்கள்**

குளியாப்பிட்டி (கிழக்கு) பிரதேச செயலாளர் பிரிவில் கிராம சேவகர் பிரிவுகளில் ஜீவனோபாய அபிவிருத்தி சிக்கனக் கடன் நிதியத்தை அமுல்படுத்துவதற்கு ரூபா 3,408,750 தொகை கிடைத்திருந்த போதிலும் அதில் ரூபா 3,263,139 தொகை மீளாய்வாண்டின் இறுதியிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**1.15 மனிதவள முகாமைத்துவம்**

**(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளவாறான பதவியணியினரும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு குருநாகல் மாவட்டச் செயலகம் மற்றும் 30 பிரதேச செயலகங்களின் தகவல்களின் பிரகாரம் பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| ஊழியர் வகை | | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடம் | மிகை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேட்ட நிலை | 116 | 108 | 09 | 01 |
| (ii) | மூன்றாம் நிலை | 76 | 66 | 13 | 03 |
| (iii) | இரண்டாம் நிலை | 2,283 | 1,768 | 515 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 311 | 264 | 48 | 01 |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | 05 | 97 | - | 92 |
| | மொத்தம் | 2,791 | 2,303 | 585 | 97 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் வெற்றிடமாகக் காணப்பட்ட 585 பதவிகளை நிரப்புவதற்கு முடியாதிருந்தது.

(ii) நிக்கவெரட்டிய பிரதேச செயலகத்தில் சிரேஷ்ட நிலையில் ஒரு உத்தியோகத்தரும் குளியாப்பிட்டி (மேற்கு), இப்பாகமுவ மற்றும் மாஸ்பொத்த பிரதேச செயலகங்களில் மூன்றாம் நிலையில் மூன்று உத்தியோகத்தர்களும், அலவ்வ பிரதேச செயலகத்தில் ஆரம்ப நிலையில் ஒரு ஊழியரும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்குப் புறம்பாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.